### தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட

# இளைஞர் அருணாச்சலம் காவலர்களின் தாக்குதலுக்குள்ளாகி மரணம்!

## காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் மவுனம் காப்பதா? சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூலை 25-**

**தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் அருணாச்சலம் காவலர்களின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்திருப்பது வேதனையளிக்கிறது என்றும், காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் மவுனம் காப்பதா என்றும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-**

தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அருணாச்சலம் என்னும் இளைஞர், காவலர்களின் தாக்குதலுக்கு ஆளாகி மரணமடைந்து இருப்பது வேதனை அளிக்கிறது.

போலீஸ் தனக்கு இழைத்த அநீதியை தனது இறுதி நிமிடங்களில் அருணாச்சலமே எடுத்துச் சொன்னதைப் பார்க்கும் போது நெஞ்சம் கலங்குகிறது.

காவல் மரணங்களின் போது துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல் அமைச்சர், கடும் நடவடிக்கைகளை எடுக்காமல் மவுனம் காப்பதால், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

மகனை இழந்து கண்ணீர் வடிக்கும் அருணாச்சலத்தின் குடும்பத்துக்கு, திரைப் படத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இந்த ஆட்சியாளர்கள் என்ன பதில் வைத்து இருக்கிறார்கள்?

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### நீட் தேர்வுக்கு எதிராகப் போராடிய மாணவர்கள் மீது தாக்குதல்

# காயம்பட்ட மாணவர்களை சந்திக்கக்கூட அனுமதிக்கவில்லை!

## மாணவர்களின் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியபின் ஆ.ராசா எம்.பி. பேட்டி!



புதுடெல்லி, ஜூலை 25-

நீட் தேர்விற்கு எதிராகப் போராடியதால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அடக்குமுறைக்குள்ளாகி காயம்பட்ட மாணவர்களின் உறவினர்களை மருத்துவமனையில் சந்தித்த பின் திமுக துணை பொதுச்செயலாளர் மக்களவை உறுப்பினர் ஆ.ராசா அவர்களின் செய்தியாளர் சந்திப்பில் வருமாறு:-

காயம்பட்ட மாணவர்களைச் சந்திக்கக் கூட அனுமதி மறுக்கும் கொடுங்கோல் ஆட்சி.

நீட் தேர்விற்கு எதிராக தலைநகரில் வீறு கொண்டு போராடிய மாணவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறை மற்றும் ஒடுக்குமுறையில் காயமடைந்த மாணவர்கள் ராம் மனோகர் லோகியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மருத்துவமனைக்கு வந்து, மருத்துவமனையினுடைய கண்காணிப்பாளரைச் சந்தித்த நேரத்தில், மாணவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவிலே சிகிச்சை பெற்று வருவதால் அவர்களைப் பார்க்க அனுமதிக்க இயலாது என்பதாகச் சொன்னார்கள்.

அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற மருத்துவ சிகிச்சையைக் கண்காணிப்பாளரிடம் கேட்டறிந்தோம். அவர்களுடைய உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினோம். அவர்களைச் சந்திப்பதற்கே சுகாதாரத் துறை அமைச்சரிடமிருந்து அனுமதி தந்தால் தான் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்த மருத்துவமனையினுடைய கண்காணிப்பாளரை ஒன்றிய அரசு மிரட்டி உள்ளது.

ஒரு நோயாளியைச் சந்திப்பதற்குக்கூட ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் சந்திக்க வேண்டும் என்று ஒரு கண்காணிப்பாளர் சொல்கின்ற அளவிற்கு, ஒரு கொடுங்கோன்மையான ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.

### கழக விவசாய அணிச் செயலாளர்

# ஏ.கே.எஸ்.விஜயன் தாயார் திருமதி ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 25-**

**கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயனின் தாயார் திருமதி ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அவர்கள் மறைவுற்றச் செய்தியறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

**இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-**

நினைவில் வாழும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.சுப்பையா அவர்களின் துணைவியாரும், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயாருமான திருமதி. AKS சுப்பம்மாள் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அன்பின் திருவுருவான அன்னையை இழந்து தவிக்கும் சகோதரர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூறாண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து மறைந்திருக்கும் அன்னையின் நினைவுகளாலேயே இந்தத் துயரில் இருந்து தாங்கள் மீண்டு வந்திட விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பே. மாரி அய்யா

**ஜூலை 25 (2020)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்” என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் “மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா” என்றும் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# திருடன் கையில் கொத்துச் சாவி கொடுத்தது போல் தவறிழைத்தவர்களைக் காப்பாற்றும் த.வெ.க. அரசு!

தி.மு.க.வின் பெயரும் குதிரை பேரத்தில் பயங்கரமாக அடிபடுகிறது என்கிறார்கள் சிலர். இது பொல்லாத த.வெ.க.வின் ஸ்டைல். 100 கோடி கோவில் நிலத்தை விற்றது 06.07.2026-ல். இதில் தி.மு.க.விற்கு என்ன சம்பந்தம்? த.வெ.க. அரசின் மோசடியை மறைக்க தி.மு.க.வையும் இழுப்பது. குதிரை பேரம் என த.வெ.க.வை சொன்னால் உடனே திசை திருப்ப தி.மு.க.வையும் சேர்ப்பது.

செந்தில் பாலாஜி மீது குறி வைப்பது ஏன்? கரூர் தேர்தலில் செந்தில் பாலாஜியும். விராலிமலை தேர்தலில் பி.டி. அரசகுமாரும் அவர்களின் கண்ணை குத்துகின்றனர்.

விஜய்யின் அஜாக்கிரதையால் கரூர் மரணம் என்றால் உடனே செந்தில் பாலாஜியை தேடுவது, குதிரைபேரம் என்றால் செந்தில் பாலாஜி, ஒன்றரை கோடி நடத்துனர் வேலைவாய்ப்பில் வீண் பழியா? உடனே தானே பணம் கட்டினாலும் அவரை ரூபாய் 50,000 கோடி திருடியதுபோல் விசாரணை. சிறைப்பழி.

மாற்று கருத்து பேசிய தலைவர்களை கூட மான நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போடுவதுதான் பழக்கம். ஆனால் அதற்காக கைது என்றால் இடி அமீன் ஆட்சிதானே! அனிதா இராதாகிருஷ்ணனின் கைக்குள் கைவிட்டு அழைத்துச் செல்வது, சொந்தக்காரில் ஏறிட அனுமதி மறுப்பது இடி அமீன் ஆட்சிதானே! மார்க்கண்டேயன் மார்பை பிடித்து தள்ளுவது முசோலினியின் மறுவடிவம் தானே! பாலியலுக்கு பொள்ளாச்சி சாட்சி, காட்டாட்சிக்கு விளாத்திக்குளமே சாட்சி. இம் என்றால் சிறைவாசம். ஏன் என்றால் வனவாசமா?


கரூரில் முதல்வர் வழங்கிய அரசுப்பணி தவறான பாதை. கரூரில் 41 பேர் மரணத்தில் உச்சநீதிமன்றத்தில் நடந்ததை வெளியில் சொல்லக்கூடாது என பல வகையில் தாஜா செய்கிறார். மகாமக குளியலில் மரணம், கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் தீ விபத்து என நீளும் விபத்துகளில், விஜய் தருவாரா பாதிக்கப்பட்டோர் குடும்பத்திற்கு வேலை.

அண்ணாமலை தனிக்கட்சி கண்டது எதைக் காட்டுகிறது என்றால் பண பலத்தைத்தான் காட்டுகிறது. உதிர்த்தால் வீ தி லீடர்ஸ் எனும் பூந்தி, உருட்டினால் பா.ஜ.க. எனும் லட்டு, கட்சியில் சேர்வதற்கு பல தலைவர்களை பார்த்து ஆசீர்வாதம் பெற்று சேருவார்கள். ஆனால் உலகத்திலேயே கட்சியை விட்டுப் போகிறேன் என அமித்ஷா, மோடி வரை சென்று பார்த்து சொல்லிவிட்டு, ஆசி பெற்று புது கட்சி தொடங்கியவர் அண்ணாமலை மட்டும்தான்.

கோவில் நிலங்கள் தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பாக இருந்தன. இந்த ஆட்சியில் கோவில் நிலங்கள் சூறையாடப்படுகின்றன என இந்து அமைப்புகள் அறிக்கை விடுகின்றன. முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு காலத்தில் தனியாரிடமிருந்த கோவில் நிலங்கள் எட்டாயிரம் ஏக்கர் பறிமுதல் செய்யப்பட்டு, கோவிலில் ரூ.8 ஆயிரம் கோடி சொத்து பாதுகாக்கப்பட்டது. த.வெ.க. காலத்தில் கோவிலின் பலநூறு கோடி சொத்து அபகரிக்கப்படுகிறது. மேலும் தினசரி கொலை. ஈவ்டீசீங். அதுவும் பெரும்பகுதி த.வெ.க. கட்சி நிர்வாகிகளால் நடைபெறுகிறது.

யார் லஞ்சம் கேட்டாலும், எங்க அண்ணன் இடம் சொல்லுவேன் என சொல்லுங்கள் என்கிறார் முதல்வர் விஜய். ஆனால் சொந்த கட்சி வக்கீல், பட்டியல் இனத்தை சேர்ந்த ஞானசௌந்தரி, அரசு வழக்கறிஞர் பதவிக்கு 20 லட்சம் கேட்கிறார்கள் என்று குற்றம் சாட்டினால் நடவடிக்கை இல்லை. வழக்காடு மன்றம் சென்றால் சந்தித்து வெற்றி பெறாமல், சொந்த கட்சி வழக்கறிஞரை கட்சியை விட்டே நீக்குவதுதான் விஜய் ஆட்சி, கட்சி நிலவரம்.

ஜெகத்ரட்சகன்தான் அவர் மகனை த.வெ.க.வுக்கு அனுப்பி வைத்ததாக சிலர் கதை பரப்புகிறார்கள். ஒரு பட்டத்து யானை மீது நீண்ட நேரமாய் குருவி குதித்து குதித்து விளையாடியது. ஒரு மணி நேரம் சென்ற பின் யானை முகத்துக்கு முன் ஒரு மணி நேரம் உங்கள் முதுகில் விளையாடி களைத்து விட்டேன் போய் வரவா என்றதாம். அதற்கு யானை நீ எப்போ வந்தாய் என்று எனக்கு தெரியாதே எப்ப வந்தாய் என்றதாம். அது போல இவர் மகன் தி.மு.க.வில் இருந்ததே யாருக்கும் தெரியாதே. ஒரு நாள். ஒரு நிமிடம் தி.மு.க.வில் இருந்திருப்பாரா அவர் மகன். விஜய் ரசிகன் விஜய் கட்சிக்கு போயிருக்கிறார். ஜெகத் அண்ணன் ஒரு வாரம் மகனுடன் வருத்தமாய் வீடு செல்லாமல் ஓட்டலில் தங்கி இருந்தவர். அவர் மனப்புண்ணை ஆற்றாமல்-குத்தி கிழிக்க வேண்டாம்.



கவிஞர்

**காசிமுத்து மாணிக்கம்**

(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

40 நாட்களுக்குள் என்ன செய்ய முடியும் என்கிறார் அமைச்சர் விஸ்வநாதன். மகளிர் விடியல் பேருந்தில் அவசரமாய் விடியலை எடுக்க முடியும். நான் முதல்வன் பெயரை மாற்ற முடியும். ஆதிதிராவிடர் நலத்துறையின் பெயரை சமூக நீதித் துறை என மாற்ற முடியும். ரூ.100 கோடி சொத்தை எடுத்து முருகனுக்கே மொட்டை போட முடியும்.

ரூ.25 ஆயிரம் கோடி மணல் கொள்ளைக்கு அச்சாரம் போட முடியும். தமிழே படிக்காத வெங்கட்டை தமிழ்நாடு பிரதிநிதியாக டெல்லிக்கு அனுப்ப முடியும். போதை மருந்து கொடுத்து என்னை கெடுக்க சொன்னதே சரவணன் எம்.எல்.ஏ. தான் என சொந்தகட்சி மகளிர் சொன்னால் கூட எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அந்த எம்.எல்.ஏ.வை பாதுகாக்க முடியும்.

அடிதடியில் ஈடுபட்டு வழக்கில் உள்ள நிதி அமைச்சர் மரிய வில்சனை அமைச்சரவையை விட்டு வெளியேற்றாமல் பாதுகாக்கும் கேவலத்தை த.வெ.க. அரசு 45 நாளில் செய்ய முடியும்.

திருடன் கையில் கொத்துசாவி கொடுத்தது போல தவறு செய்யும் அமைச்சர்களையே அமைச்சர்களாக 45 நாளில் பாதுகாக்க முடியும்.

தி.மு.க. ஆட்சியில் மரணம் என்றால் தளபதி ஸ்டாலின் அவர்களைப் பார்த்து இன்றைய முதல்வர் அதிகாரிகள் மீது பழி போடாதீர்கள், அதிகாரிகள்தான் பொறுப்பு என்றால் சி.எம். சார் நீங்கள் எதுக்கு ஆட்சியில் இருக்கிறீர்கள் என்று கேட்ட அவரது ஆட்சியில் 45 நாளில் சபரிவர்மன் சிறைக் காவலில் இருந்தவரை அடித்துக் கொன்றாலோ, ரூ.100 கோடி இடம் 2 கோடிக்கு பறிபோனாலோ, அதிகாரிகள்தான் என அதிகாரிகள் மீது பழிபோடுவதும் இந்த 45 நாளில் த.வெ.க. ஆட்சியால் முடிந்ததுதானே.

### தி.மு.க. மாநில விவசாய அணி செயலாளர்

# ஏ.கே.எஸ்.விஜயனின் தாயார் சுப்பம்மாள் அம்மையார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், ஜூலை 25

தி.மு.க. மாநில விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் முன்னாள் சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.கே.எஸ். விஜயன் தாயார் சுப்பம்மாள் அம்மையார் காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அம்மையாருக்கு வயது 102.

மறைந்த சுப்பம்மாள் அம்மையார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பொதுவுடைமைப்போராளி. ஏ.கே.சுப்பையா அவர்களின் மனைவி ஆவார்.

அம்மையாரின் மறைவின் தகவலறிந்த கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளும், வார்டு மற்றும் கிளைக்கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் மறைந்த சுப்பம்மாள் அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

### உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் –

# கீழ்குந்தா பேரூர் தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!



நீலகிரி. ஜூலை 25-

நீலகிரி மாவட்டம், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் மற்றும் கீழ் குந்தா பேரூர் கழக தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் ஒட்டிமொரா ஒசட்டி கூட்ட அரங்கில் மாவட்டக் கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூவின் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றியக் கழகச் செயலாளர் ஜெகதீசன் அவர்கள் வரவேற்று பேசினார். மாவட்ட அவைத் தலைவர் போஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் பில்லன், மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியத்திற்கு உட்பட்ட கிளைக் கழகங்களிலும் தொடர்ந்து கழக நிகழ்சிகள் நடத்துவது எனவும்,

உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், ஒன்றிய கழக நிர்வாகிகள் சாகுல் அமீது, சிவசுப்ரமணியம், ஈஸ்வரன், ராஜூ, கீழ் குந்தா பேரூர்க் கழக நிர்வாகிகள் மாடாக் கண்ணு, சிவகுமார், மணி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சண்முகம், சங்கர், ஈஸ்வரன், முன்னாள் தலைவர்கள் பந்தையன், குப்புசாமி, சரவணன் உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் கீழ் குந்தா பேரூர் செயலாளர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.